2002 ஏப்ரல் 4]

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை வட்டம், தோகைமலை என்பது பின்தங்கிய பகுதி. அங்கே பல வண்ணங்களில் கிரானைட் கற்கள் எடுக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, டாமின், தனியார்கள் மூலமாக நிரம்பக் கற்கள் எடுக்கப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் பர்கூரில் ஒரு மெருகூட்டும் தொழிற்சாலை தொடங்கியதுபோல, கற்களுக்கு மெருகூட்டும் தொழிற்சாலை ஒன்றை தோகைமலைப் பகுதியில் தொடங்கிவிட்டால், அந்தப் பகுதி தொழில் வளம் பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அங்கே, பக்கத்திலே இருக்கிற மதுரை வரையிலும்கூட அந்த மெருகூட்டும் தொழிற்சாலை இல்லாத காரணத்தால், அந்தப் பகுதியில் அந்த மெருகூட்டும் தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க அம்மா அவர்கள் ஆட்சியிலே முயற்சி எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திட்டம் ஏதுமில்லை. மாண்புமிகு அம்மாவின் அரசு சிந்திக்கும்; மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 92, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

92—

சுகாதாரக் கேடு

***7086—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகரில் அரசுக்குச் சொந்தமான டான்காப் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளிவரும் நாற்றம் குடியிருப்புப் பகுதி மற்றும் அரசு கலைக் கல்லூரிப் பகுதிகளில் சுகாதாரக் கேடு விளைவிப்பதால் எண்ணெய் சுத்திகரிப்பின்போது வரும் நாற்றத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விருத்தாசலம் நகரில் அரசுக்குச் சொந்தமான டான்காப் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்போது நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. எனவே, எவ்விதத் துர்நாற்றமும் வெளிவர வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் கோவிந்தசாமி (குறுக்கீடு), திரு. ஜி.கே. மணி,*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரிலே டான்காப் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளிவரக்கூடிய கழிவுப் பொருளாலே அங்கே துர்நாற்றம் இருக்கிறது. துர்நாற்றம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது விந்தையாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை மணி, தொழிற்சாலை மூடப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்.*

திரு. ஜி.கே. மணி: *ஆகவே, மீண்டும் அது திறக்கப்படுகிற நேரத்திலே வெளியேற்றப்படக் கூடிய அந்தக் கழிவுப் பொருளைச் சுத்திகரிப்புச் செய்து அங்கே நாற்றம் இல்லாமல் இயங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை இயக்கப்படுவதற்குமுன், துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்தத் தேவையான சாதனங்களைப் பொருத்தி இயக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது மேற்படி டான்காப் நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதற்கு 30-11-2001 நாளிட்ட அரசாணை எண் 345-ல் தக்க உத்தரவை அரசின் வேளாண்மைத் துறை பிறப்பித்துள்ளது. எனவே, இனிமேல் மேற்படி நிலையத்திலிருந்து எவ்விதத் துர்நாற்றமும் வர வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 93, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.*

93—

பால் குளிரூட்டும் நிலையம்

***7414—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—